**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-07-2021**

**திருச்சிராப்பள்ளி(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2021-07-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2021-07-17 | 2021-07-18 | 2021-07-19 | 2021-07-20 | 2021-07-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 2.0 | 4.0 | 8.0 | 2.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 36.0 | 36.0 | 36.0 | 37.0 | 37.0 |
| டிமின் (° C) | 26.0 | 26.0 | 25.0 | 26.0 | 26.0 |
| RH I (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| RH II (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கிமீ) | 20.0 | 20.0 | 20.0 | 20.0 | 20.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 270 | 270 | 270 | 270 | 270 |
| மேகக்கணி (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

இந்த வாரத்தில் 4 நாட்கள் மிதமான முதல் கனமான மழை வரை எதிர்பார்க்கப்படுகிறது. சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (85.0% & 50.0%), 36.4°C மற்றும் 25.8°C என எதிர்பார்க்கப்படுகிறது. மழை பொழியக்கூடிய மேகங்கள் ஆங்காங்கே காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 20.0 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், அதிகபட்சமாக 25.0 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று மேற்கு மற்றும் தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் மழை அளவானது இந்த வாரம் (18.07.2021 முதல் 24.07.2021 வரை) சராசரியை விட அதிகமாக பொழிய வாய்ப்புள்ளது (2.43 மி.மீ. லிருந்து 2.68 மி.மீ.)

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

வரும் நாட்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால்

| |
|---|
| விவசாயிகள் பயிர்களுக்கு மண்ணின் ஈரப்பதத் தன்மையை பொறுத்து நீர் பாசனம் செய்யவும் மற்றும் மருந்து தெளிப்பினை தள்ளி வைக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கருப்பு கிராம் | வம்பன் 8 உளுந்து இரகம் 10 டன் விதை உளுந்து வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி-ல் உள்ளது. தொடர்புக்கு: 8508835287 |
| கரும்பு | கரும்பில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த மாலத்தியான் மருந்தினை 2 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| சோர்கம் ( ஜோவார் / கிரேட் மில்லெட் ) | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக குருத்து ஈ-யின் தாக்கம் சோளத்தில் அதிகம் ஏற்படக்கூடும். எனவே, இதனைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 30 EC 500 மி.லி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| நிலக்கடலை | பயறு விளைச்சலை 20% உயர்த்த, வறட்சியை தாங்கி வளரக்கூடிய தன்மையை அதிகரிக்க மற்றும் பூக்கள் உதிர்வதை தவிர்க்க, பூ பூக்கும் பருவத்தில் பயறு ஒண்டெர் 2 கிலோ-வை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| பொழுதுவணங்கி | பூவின் அடிப்பாகத்திலுள்ள இதழ்கள் மற்றும் பின்புறம் மஞ்சள் நிறமடைந்து பூக்கொண்டையிலுள்ள விதைகள் கடினத்தன்மை அடைந்திருப்பது முதிர்ச்சிடைந்தமைக்கு அறிகுறியாகும். உலர்ந்த பூக்கொண்டைகளைப் பறித்து உலர்த்திய பின் விதைகளைத் தனியே பிரித்தெடுத்து சுத்தம் செய்யவேண்டும். அறுவடைக்குப் பின் விதை நேர்த்தி செய்து விதைகளை 8 முதல் 9 சத ஈரப்பதம் வரும் வரை நன்கு உலர வைக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாழையில் குருத்து சுருட்டு அழுகல் நோயின் தாக்கம் ஏற்படக்கூடும். எனவே இதனைக் கட்டுப்படுத்த மேங்கோசெப் 75% WP @ 1.5-2.0 கிலோ/ எக்டர் என்ற அளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| தேங்காய் | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். |
| மரவள்ளிக்கிழங்கு | மரவள்ளியில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த அசிரோபாகஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100 எண்ணிக்கை விட வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆடுகளில் ஜன்னி ஏற்படுவதால் காய்ச்சல், மூச்சுத்திணறல், சளி, இருமல், தீவனம் எடுக்க இயலாமை & எடைகுறைதல் போன்ற மாற்றங்கள் ஏற்படும். இதனை தவிர்ப்பதற்கு சுத்தமான குடிநீர் மற்றும் பரந்த காற்றோட்டமான கொட்டகைகளில் ஆடுகளை அடைக்கவும். |
| பசு | கறவை மாடுகளில் மடிவீக்க நோயை கட்டுப்படுத்த பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கொண்டு பால் மடியை கறப்பதற்கு முன்பும் பின்பும் சுத்தம் செய்யவும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | காற்றின் வேகம் மற்றும் வெப்பநிலை அதிகரித்து காணப்படுவதால் கோழிகளுக்கு போதிய அளவு நல்ல தண்ணீர் குடுக்க வேண்டும். மேலும் தீவனம், மழை மற்றும் காற்றில் சேதமடையாதவாறு கூடாரங்களில் சேமிக்கவும். பகல் நேர வெப்பநிலை 32° செல்சியஸ் நிலவ வாய்ப்புள்ளதால் கோழிகளுக்கு கொடுக்கப்படும் தீவன முறையை அமினோ அமிலங்கள் மற்றும் எலெக்ட்ரோலைட் கலந்து கொடுக்கவும். |